# பாபநாசம்சிவன் கீர்த்தனைகளில் சைவ சித்தாந்த தத்துவச் சிந்தனைகள்

அ. சுகன்யா


**ஆய்வுச்சுருக்கம்**

*'தமிழ்த்தியாகையர்' என்று இசையுலகத்தினரால் போற்றப்பட்டவர். இவரது குடும்பப்பின்னணியும், வாழ்ந்த சூழலும் இவரை மிகச்சிறந்த வாய்ப்பாட்டுக்கலைஞனாகவும் சிறந்த தமிழிசை சார்ந்த வாக்கேயகாரராகவும் இசை வரலாற்றிலே பதிவு செய்ய வழிவகுத்தது. இவரது படைப்புக்கள் சாஸ்த்திரிய இசை மற்றும் தமிழ்த்திரையுலக இசை வரலாற்றிலும் பெரும் பங்கினை வகித்திருந்த போதிலும் இவருடைய பாடல்கள் பெரும்பாலும் இறைபுகழ் பாடுவதாகவே இருந்திருக்கக் காணமுடிகின்றது. இது மட்டுமன்றி பிறவிப்பிணியகற்றி ஆன்ம ஈடேற்றம் வேண்டி பரம்பொருளை நோக்கிப் பாடப்பட்டவையாகவே காணப்படுகின்றது. எவ்வாறு நாயன்மார்கள் இசையால் இறையைப் போற்றி தம்மையும் சமூகத்தையும் நல்வழிப்படுத்தினார்களோ அதற்கொப்பாக சிவனது படைப்புக்களையும் நோக்க முடிகின்றது. இந்த வகையிலே தமிழிசை வளர்த்த சிவனாரின் படைப்புக்கள் எத்துணைதூரம் சைவ சமயகருத்துக்களையும், சைவ சித்தாந்தக் கருத்துக்களையும் உள்ளடக்கியிருக்கின்றது என்பதனை ஆராய்ந்து சிவனாரது படைப்புக்கள் இசையை மட்டுமல்லாது கூடவே சைவ சமயத்தையும் அதன் தத்துவங்களையும் சமூகத்திற்கு எடுத்துக்கூறுவதிலே பெரும் பங்கு கொண்டிருக்கின்றது என்பதைத் தெளிவுபடுத்தும் வகையிலே இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.*


**திறவுச்சொற்கள்:** சித்தாந்த தத்துவம். முப்பொருள். இசை. கீர்த்தனம். பவவினை. பரகதி.

**அறிமுகம்**

இசை, இசையவைப்பது. இலகுவாக மனங்களைக் கவரவல்லது. எந்த ஒரு விடயத்தையும் சாதித்துவிடக்கூடிய சக்தி இசைக்குண்டு. இறைவனையே அசைக்கவல்லது இசை. இறைவனை இலகுவில் அணுகுவதற்கும், அதன் வழி வீடுபேற்றினை எய்துவதற்கும், இசை ஒரு இலகுவான கருவியாகத் திகழ்கின்றது. சமூகத்தினை சீரான பாதையிலே நடத்திச்செல்வதற்கு இசையைக் கருவியாகப் பயன்படுத்தி வெற்றி கண்ட பலர் இருக்கின்றார்கள்.

இசையும் பக்தியும் இரண்டறக்கலந்தது என்பது கற்றறிந்தோரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மெய்ப்பொருள். இசை என்பது உலகியல் வாழ்விற்கும் தெய்வீகானுபவத்திற்கும் இடையேயான மத்தியஸ்தராக விளங்குகின்றது என்று மேலைத்தேயத்து இசைமேதை லுட்விக் பீத்தோவன் அவர்கள் இசை பற்றிப் பேசும்போது குறிப்பிடுகின்றார். (Music is the mediator between the spiritual and the sensual life." Ludwig van Beethoven)[1]. இது தென்னிந்திய இசைமரபிற்கும் பொருந்தும்.

இசை என்பது மனதை ஆற்றுப்படுத்தக்கூடியது, ஆன்மாவை மேம்படுத்தக்கூடியது, மனங்களைக் கவரவல்லது. இறைவனுக்கருகே ஆன்மாவை அழைத்துச் செல்ல இசையைப்போன்ற இலகுவான ஆற்றல்மிக்க கருவி வேறு எதுவுமில்லை. அத்துணை வல்லமைமிக்கது இசை. ஆன்மாவை வசப்படுத்தி ஆன்ம ஈடேற்றத்தை ஏற்பத்தவல்லது. இந்தக்கருத்தினை வலியுறுத்துவதாக உலகப் புகழ் மிக்க இசை மேதையின் குறிப்பு அமைகின்றது.

"Music should be healing; music should uplift the soul; music should inspire. There is no better way of

விரிவுரையாளர், இசைத்துறை, யாழ் பல்கலைக்கழகம்,
தொ.பே இல. 0773166799 *saravinthon@hotmail.com*

getting closer to God, of rising higher towards the spirit, of attaining spiritual perfection than music, if only it is rightly understood." — Hazrat Inayat Khan.2

இத்துணை இசையின் ஆற்றலை காலந் தோறும் உணர்ந்த சில மகான்கள் அதனை முறைப்படி கையாட்சி செய்து தாமும், தாம் சார்ந்த சமூகத்தினையும் இசைவழி ஆற்றுப்படுத்தி இறையருளைப் பெற்று பேரானந்தப் பெருவாழ்வினை அனுப வித்திருக்கின்றனர்.

இந்தப்பாதையின் வழி தமிழ்ப் பண்பாட்டி னூடாக வந்தவர்தான் தஞ்சை பாபநாசம் சிவன் அவர்கள். தமிழிசைக்காக அரும்பாடுபட்டவர். தனது அனுபவத்தின் வெளிப்பாடாக இவரது கீர்த்தனைகள் வெளிப்பட்டிருப்பினும்கூட அதன் வழி, தான் சார்ந்த சமூகத்தின் ஆன்ம ஈடேற்றத்திற்கான வழிவகைகளைத் தனது கீர்த்தனங்கள் வாயிலாக எடுத்துக் கூறி யிருக்கிறார்.

**பாபநாசம் சிவன் அவர்களது பின்புலம்.**

பாபநாசம் சிவன் அவர்கள் 1890ல் தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டத்திலுள்ள போலகம் என்கின்ற சிறிய கிராமத்திலே பிறந்தவர். தாயார் யோகாம்பாள் இசையிலே மிகச்சிறந்த தேர்ச்சிபெற்றவர். தாயார் வழிப்பரம்பரையினர் இசையின் மீது நாட்ட மும் தேர்ச்சியும் கொண்டவர்கள்.

சிறுபருவத்திலிருந்து கோவில்களுக்குச் செல்வதும், நாமாவளிகள் பாடுவதும், அங்கு நடைபெறுகின்ற அரிகதைகளைக் கேட்பதுமாக இவரது இளமைக்காலம் தொடர்ந்தது. பிற்காலத்திலே இவ்வனுபவம் இவரை கதாகாலேட்சபங்கள் நிகழ்த்து வெதற்கும், எழுதுவதற்கும் மிகவும் துணை புரிந்தன. தஞ்சை மாவட்டம் முழுவதும் தன்னு டைய சகோதரருடன் நடைப் பயணமாவே சென்று திருவிழாக்களின் போது பஜனைகள் செய்திருக்கின்றார்.

சிவன் அவர்கள் கோவில்களுக்கு முனி வர் போல புலித்தோலணிந்து சென்று பக்திப் பாடல்கள் பாடுவது வழக்கமாயிருந்தது. இதன் காரணத்தினால் இராமையா ஆகிய இவர் 'சிவன்' என்று அழைக்கப்பட்டார்.

இவ்வாறு இறைபணியாகவே இசைப் பணியாற்றிவந்த சிவனுக்கு ஏழு வயதிலே ஏற்பட்ட தந்தையாரின் இழப்பும், இருபது வயதிலே ஏற்பட்ட தாயாரின் இழப்பும், தொடர்ந்து தந்தையாகவே போசித்திருந்த இசைவாத்தியார் கோனேரிராஜபுரம் வைத்தியநாத ஐயரின் இழப்பும் மனதளவிலே ஒரு துறவு நிலையை ஏற்படுத்தியிருந்தது.

சிவன் அவர்களது பாடல்கள் இவர் வாழ்ந்த இந்தப்பின்புலத்தினை தெற்றென வெளிக்காட்டிநிற்பதை இவரது படைப்புக்கள் மூலமாகத் தெரிந்து கொள்ளமுடிகின்றது.

**சிவன் கீர்த்தனைகளும் சைவ சித்தாந் தக்கருத்துக்களும்.**

சைவசித்தாந்த தத்துவத்தின் சாரமாக வியங்குவது மெய்ப்பொருளுண்மை. பதி, பசு, பாசம் இவை மூன்றும் உள்பொருள். இவற்றுள்ளும் பதி எனப்படுகின்ற ப்ரம்மம் பரம்பொருள். இதுவே அனாதியானது, எங்கும் நிறைந்தது.

உலக வாழ்வின் தத்துவ சாரமாக அமை வது சைவசித்தாந்தம். உண்மைப்பொரு ளுணர்த்துவது சித்தாந்தம். பதி, பசு, பாசம் என்கின்ற முப்பொருள் நிலை பற்றி பேசுவது.

'பதி பசு பாசம் எனப்பகர் மூன்றின் பதியினைப்போல பசு பாசம் அனாதி' என்கின்ற ஆதிகூற்றுக்கிணங்க, இந்த

மூன்றும் அனாதியானவை. ஆன்மா தன் முன்வினைப் பயன்களுக்கேற்ப பல உடல்களில் நின்று தொழில் செய்கின்றது. முத்தியில் இறைவனிடம் பேரானந்தத்தைப் பெறுகின்றது. சைவசித்தாந்தம் முப்பொருள் பற்றிப்பேசினாலும் இவை ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு இயங்குவதாக தத்துவ விளக்கமளிக்கின்றது.

பசுவானது பாசத்தினாற்கட்டுண்டு வினைகளைச் சுமக்கின்றது. கன்ம வினைகளுக்கேற்ப பசுவானது பிறவிகளை எடுக்கின்றது. பிறவிப்பெருங்கடல் நீந்தி பரமானந்தப் பேறு பெறுவதற்கு வழிபாடு கால்வாயாக திகழ்கின்றது. ஆன்மைக்களை பரம்பொருள் காத்து நிற்கின்றது.

இது போன்ற சித்தாந்தக் கருத்துக்கள் சிவன் கீர்த்தனைகளிலே பொதுவாக எல்லா இடங்களிலும் பிரதிபலிக்கக்காணலாம். நடராஜப் பெருமானை முழுமுதலாகக் கண்டு தன்னையே சமர்ப்பித்து பிரபக்தி வழியில் நின்று இறைவனை வழிபட்டு கீர்த்தனங்களை எழுதியவர் சிவன் அவர்கள். இந்த வகையிலே,

'ஆதி அந்தமில்லா ஆனந்தரூபனே
ஆண்டருள்வாய் தில்லைத்தாண்டவனே ஐயா'[1]..
என்றும். 'எந்தனு யிர்க்காதாரம்
எங்கும் நிறைந்த ப்ரம்ம மயம்
சுந்தரத்தின் மனம் கமழும்
சத்குருவே எமக்கபயம்'.[2]

என்றும், எல்லாம் வல்ல தில்லைக்கூத்தனை பரப்ரம்மமாகக் கொண்டு பாடுகின்றார். பெரும்பாலும் பாபநாசம்சிவனது கீர்த்தனைகளில் நடராஜப்பெருமான் பரம்பொருளாகக் கொள்ளப்பட்டிருப்பதைக் காண்பது சிவனது படைப்புக்களின் சிறப்பு எனக் கொள்ளலாம்.

மேலும்,'ஸாரஸப் பூம்பாதம் பணி வோம் என்கின்ற பெஹாக் இராக ஆதி தாளத்திலமைந்த கீர்த்தனையிலே,

'அங்குமிங்கும் எங்குமே நிறைந்தவன்
அன்பிலார்க்கு இல்லாது மறைந்தவன்
அகிலஉயிரும் படைத்தளித்தழிப்பவன்
அனைத்துயிர்க்கும் அன்னை தந்தையாய்
தழைப்பவன்' ,[3] என்கின்ற வரிகளும்
'நீயே மூவுலகிற்காதாரம்
நீயே சிவாகம மந்ரசாரம்
நீயே வாழ்விலென் ஜீவாதாரம்..' [4]

என்ற வரிகளும்,

'ப்ரம்மமே பரதெய்வமே
பரவசமாய் பரிபூரணனே..' [5]

என்ற வரிகளும்,

இவ்வுலகின் அனைத்திற்கும் மூலமாயமைவது, அதன் அசைவிற்கும் இயக்கத்திற்கும் ஆதாரமாக விளங்குவது பதியே என்கின்ற சித்தாந்தக் கருத்துத்துக்களை இவர் தனது கீர்த்தனை வரிகளில் ஆணித்தரமாக வலியுறுத்தி நிற்பதை மேற்படி எடுத்துக் காட்டுக்கள் மூலம் கண்டுகொள்ள முடிகின்றது.

சைவசமயமானது பரம்பொருளை ஒன்றாகவும், பலவாகவும் விரிந்திருகின்ற தத்துவத்தை முதன்மைப்படுத்தி நிற்கின்றது. 'ஒன்றாய்ப் பலவாய் அமர்ந்திருந்தாரே' என்று சைவசமயம் பரம்பொருள் பற்றிக் குறிப்பிட்டு நிற்கின்றது. இவ்வாறே சிவன் அவர்களும் நடராஜப் பெருமானை நோக்கிப் பல கீர்த்தனைகளைப் பாடியிருப்பினும் பராசக்தி, விநாயகர், முருகன் முதலிய பதியின் பல வடிவங்களையும் தனது கீர்த்தனைகளிலே பாடுபொருளாகக் கொண்டு பாடியிருப்பதைக் கண்டுகொள்ள முடிகின்றது.

'பற்பல பெயருடன் பாரெங்கும் நிறைந்த
பர்வத வர்த்தினி ஈஸ்வரியே' [6]

என்றும்,

'அகில உலகெலாம் ஈன்றவளே' [7]

என்றும்,

பரம்பொருளின் வியாபகம் பற்றியும், பரிபூரணம் பற்றியும் தனது கீர்த்தனைகளிலே பாபநாசம்சிவன் அவர்கள் பதிவு செய்தி

ருப்பதனை மேல் குறிப்பிட்ட சில எடுத்துக் காட்டுக்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

மேலும். 'திருவருள் தந்தருள் தேவி' என ஆரம்பிக்கும் பியாகடை இராகக் கீர்த்தனை யிலே,

'உருவமில்லாத நீ கருணையினால்- பல
உருவமேமுலகெங்கும் கோயில் கொண்டாய். [8]

என்றும்,

'உருவில்லா இறைவா நீ உருவம் பல கொண்டாய்
ஒரு மனுடன் அன்னை உமையவளை ஆண்டவா.. [9]

என்றும், பல இடங்களிலே பரம்பொருளின் பல்லுருவம் பற்றிப் பேசியிருப்பதைக் காண முடிகின்றது.

உலகியல் வாழ்க்கை நீர்க்குமிழி போன்று நிலையில்லாதது. மரணமும் ஜனனமும் மாறிமாறி வரும் நிலையான, தொடர்ச்சியான செயற்பாடு. நாம் செய்கின்ற செயல்களுக்கேற்ப விளைவுகள் ஏற்படுகின்றன. உலகியலிலே ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மும்மலங்களும் நிலையானவை. பசுக்களை பாசமானது பற்றிப்பிடிப்பதால் வினைச்சுமையை உயிர்கள் சுமக்கின்றன. இது சித்தாந்தம் கூறும் பாசம் பற்றிய எண்ணக் கருவின் அடிப்படைத்தத்துவம். இதனை நன்கு புரிந்த பாபநாசம்சிவன் அவர்கள் தனது கீர்த்தனைகளில் பெரும்பாலும் உலக வாழ்க்கையின் நிலையாமை பற்றி மிக அழகாகவும், விரிவாகவும், எளிமையாகவும், அழுத்தமாகவும் எடுத்துக்கூறியிருப்பதைக் காண முடிகின்றது. இத்துணை ஆழமான தத்துவத்தினை மிக எளிமையாக எவரும் புரிந்துகொள்ளும்வகையிலே படைத்திருப்பது சிவனது படைப்புக்களின் சிறப்பு.

'கன்ம வினையில் பல கொடுந்தொழில் செய்த
கல் மனம் உருக பாடும் சிவகுமரி' [10]

என்றும்,

'பிறவிப்பெருங்கடல் இலையென பலமுறை
பிறவியெடுத்து அலுத்தேனே
இறைவா உந்தன் பதமலர் அடைய விழைந்த' [11]

என்றும்,

'பிறவா வரம் தாரும் ..
பிறவா வரம்தாரும் பிறந்தாலுன் திருவடி
மறவா வரம் தாரும் மாநிலமீதினில்' [12]

என்ற வரிகளும்,

'சரண பங்கஜம் அலது'.. எனத் தொடங்கும் மாயாமாளவகௌளை இராகத்திலமைந்த கீர்த்தனையிலே,

'ஜனன மரண வஞ் சுழலிலுழலும் ஐந்து கோடிகளில் ஒன்றாய் அழிந்தேன்'.. என்கின்ற வரிகள் மிகச் சிறப்பான வகையிலே பிறவிப்பிணிபற்றி விளக்கிநிற்பதைக் கண்டு கொள்ளமுடிகின்றது. [13]

'நானொரு விளையாட்டுப் பொம்மையா'.. என்கின்ற கீர்த்தனையிலே, 'நானிலத்தில் பல பிறவியெடுத்துத்துத் திண்டாடியது போதாதா?'என்கின்ற வரிகள், [14]

'நீர்க்குமிழி இவ்வுடலின் வாழ்வுநிலையாத உலகில் ஏது மகிழ்வு' [15] என்கின்ற வரிகள்,

'எனையோர் வேடமிட்டுலக அரங்கி லாட விட்டாய்என்னால் இனியாட முடி யாது திருவுளமிரங்கிஆடினது போது மென் றோய்வளிக்கஉன்னையல்லால் வேறே கதி இல்லையம்மா'.. [16] என்கின்ற வரிகளும்,

'மனமே கணமும் மறவாதே ஜெகதீசன் மலர் பதமே'..எனத் தொடங்குகின்ற பீம்பிளாஸ் இராகக் கீர்த்தனையிலே, 'மோஹம் மூழ்கி பாழாகாதே மாய வாழ்வு சதமா..

நாதன் நாமம் நீ பஜி இன்றே
நாளை என்றால் யாரதைக் கண்டார்
ஆதலால் பவரோகம் அழிந்திடுமே..

நடையும் தளர தேகம் ஒடுங்க நாவது குழற கண்கள் மங்க என்ன செய்வாய் துணையார் வருவார் இன்று..' [17]

என்கின்ற வரிகள் உலக வாழ்வின் நிலையாமை பற்றி தெள்ளத்தெளிவாகப் பேசுகின்றன.

முகாரி இராகத்திலமைந்த, 'கான விரும்பும் மனம் தானுவின்..' எனத்தொடங்கும் கீர்த்தனையிலே,

'ஆணவமாதி மலம் வீசிப் படர்ந்தாலே
அறிவொளி அணையுமுன் விளங்கும் மெய்க்குருவை'[18] என்று மும்மலங்கள் பற்றி சிவன் அவர்கள் குறிப்பிட்டுச் செல்வதை காணமுடிகின்றது.

மேலும் மணிரங்கு இராகக் கீர்த்தனை ஒன்றிலே,

'பாப புண்ணியம் அறிந்து நன்னெறி செல்ல
பகுத்தறவளித்த பரமனே - பதித
பாவனனே புவனனே பதியே என்று
பாடி யாடி ஒன்று கூடி ப்ரம்மானந்த'[19]

போன்ற எடுத்துக்காட்டுக்கள் வினைகள் பற்றிய தத்துவக்கருத்துக்களை வெளிப்படுத்தி இருப்பனவாகக் காணப்படுகின்றது.

'தெய்வம் துணையறிவீர்'.. என்கின்ற கீர்த்தனையிலே,

'பொய் வளர்ந்த வினை ஐம்புல வாதனை
புரியும் இந்ர ஜால உயிர் வாழ்வில்
சுக துக்கமும் கலந்திருக்கும் - முடிவில்
துக்கமே மிஞ்சியிருக்கும் - இந்த
ஜகமேல் ஜனனமும் மரணமும் துன்பமும்
சங்கடம் இதைத் தீர்த்து அருள் செய்ய நமக்கு
தெய்வம் துணையறிவீர்'[20]

என்கின்ற வரிகளும்,

'முடிவிலாக் கடல் நடுவில் சிக்குண்டு
முவாசை கயிற்களால் கட்டுண்டு
மோதும் கவலை நோய்களால் மொத்துண்டு
முறையோ முறையோ என்று கதறும் அடிமை யிடம்..
ஏனுனக்கின்னும் இரக்கமில்லையா..'[21]

'பாருலகிற்கொரு பாரமாய் பாபச்சுமை
தோரமாய்பாச நிறை மன விகாரமாய் பாரில்
உழலவிட்டாய்.'[22]

என்கின்ற வரிகள் பூவலகின் பாவச்சுமைகள் பற்றி எடுத்துரைப்பனவாக இருக்கின்றன.

'சிறிதேனும் இரங்கலாகாதா' என்கின்ற கீர்த்தனையிலே,

'காமாதி அறுபகை குரங்குகளின் கையிலே
பூமாலை போலுமைனைக் கொடுத்ததுமுன்
கருணையோ..'[23]

என்று கேட்கின்றார்.

'பூமியில் மானிட ஜென்மமடைந்தும் ஓர்
புண்ணியமின்றி விலங்குகள் போல
காமமும் கோபமும் உள்ளம் நிரம்ப வீண்
காமமும் செல்ல மடிந்திடவே
மண்மீதிலோர் சுமையே பொதி தாங்கிய
பாழ்மரமே வெறும் பாமரமே'[24]

என்கின்ற கீர்த்தனை வரிகள் பூவுலகின் நிலையாமை பற்றிய தத்துவங்களை மேலும் தெளிவுபடுத்துவதாக அமைந்திருக்கின்றன. இது மட்டுமல்லாமல் இந்த தத்துவ விசாரங்களை இலகுவில் எவரும் புரிந்து கொள்ளும் வகையிலே சித்தாந்த வாழ்வியல் தத்துவங்களை தெளிவுபடுத்தியிருக்கின்றார் என்பதை தெரிந்து கொள்ளமுடிகின்றது. மேலும்,

'பாருலகில் உழன்று நொந்தோன் நொந்தேன்
பாவ வினையுடல் சுமந்தேன் வந்தேன்
காரிருள் மாயைக்கிடம் தந்தேன் தந்தேன்
கமலப் பாதம் மறந்தரலந்தேன் எந்தாய்!
கர்ப்ப வாஸம் இனித்தாளேன் தாளேன்
கர்ம பந்தப் பிறவி மீளேன் மீளேன்..'[25] என்றும்,

'பவவினை தீர்த்திடும் தில்லைத்தலத்திலே
உவகையுடன் நீயாட சிவகுமாரி பணியும்'[26]

என்றும் தனது கீர்த்தனைகளிலே பல இடங்களிலே சிவன் அவர்கள் பவ வினைகள் பற்றிக் குறிப்பிட்டு சென்றிருப்பதனைக்கண்டு கொள்ள முடிகின்றது.

இது தவிர பல இடங்களிலே பாப நாசம் சிவன் அவர்கள் பிறவிப்பிணி பற்றியும் பந்தவினைகள் பற்றியும் தனது கீர்த்தனைகளிலே அனேக இடங்களிலே பதி விட்டுச்சென்றிருக்கின்றார். இதற்கு சிவன் அவர்களது வாழ்விலே பெற்ற அனுபவத்தின் வெளிப்பாடு என்று கருதவும் இடமுண்டு. இவரது சாரங்கா இராகத்திலமைந்த 'கொஞ்சம் தயைபுரியலாகாதா' என்கின்ற ஆதிதாளக் கீர்த்தனையிலே,

'மாயை உலக வாழ்வு வென்ற
பின்னும் இதை விட்டோட வழியும்
தெரியவில்லை'.[27]

என்றும்,

'சிவகாமசுந்தரி..'எனத்தொடங்கும் முகாரி இராக ஆதி தாளத்திலமைந்த கீர்த்தனையிலே,

'பவரோக மறவேறு மருந்தேது
பழவினைகள் தொடராமல் உனை பஜிக்க..' [28]

என்றும்,

'புவனேச்வரி பாதம்'..எனத் தொடங்கும் கீர்த்தனையிலே,

'பவபயமற அருள்புரிபவள்
பரம தயாநிதியாகிய..' [29]

என்றும்,

'மயிலாபுரியில் வந்த மகாதேவன்..
பந்த வினைகள் மறையும் சிந்தை கலக்கம்
குறையும் - சௌ பாக்யம் நிறைந்து பொங்கும்
ஆரோக்யம் மெய்யில் இலங்கும் அந்தம்
ஆதியுமில்லா அருள்ஜோதி வடிவாக ஐயன்
தன்னை மறவா மெய்யன்புடன் எந்நாளும்.. [30]

என்றும்,

'கற்பகமே அம்மா..' எனத்தொடங்கும் ஸஹானா இராகக் கீர்த்தனையிலே.

'இளமையும் இனிமையும் ஒரு நிலையில்லா
இகமதில் வேறு புகலெனக்கில்லை உளந்தனில்
உறுதியும் ஒரு சிறிதும் இல்லை உரிமையுடன்
சிவ குமரி வேண்டும்..' [31]என்றும்,

'சொந்தம் பந்தம் விட்டுனை சொந்த மென் றடைந்தேனே பந்த வினை அறும் பரமபதம் தரும்' [32] என்றும்.

பிலஹரி இராக கீர்த்தனையில்,

'மறுபிறவி அடையாமல் மகவெனை ரட்சிப்பாய்' [33]

என்றும்,

தர்மவதி இராக ஆதி தாளக் கீர்த்தனையில்,

'கர்ம வினை போக்கி கவலைகள் நீக்கி.. [34]

என்றும்,

புன்னாகவராளி இராகம், ஆதி தாளக் கீர்த்தனையில்

'பவபயம் போக்கி பக்தரைக்காக்க
பரவெளி எங்கும் பரந்து நின்ற'..என்கின்ற அடிகளும். [35]

கானடா இராகத்தில் ஆதி தாளத்திலமைந்த, 'ஜய ஜய போற்றி என்று தாள் பணிவோம்' எனத் தொடங்கும் கீர்த்தனையிலே,

'அயன் படைத்த உலகில் மயக்கங்கள் அதிகம்பயங்களைப் போக்கிடும் பாபநாசம் ஹாரணதினம் தினம் அவர் திருப்பார்வையில் நனைந்தால் மனம் நிலைப்படும் மாயையும் அகலும் சினம் முதல் சிறுமை குறைகளும் குறையும் சிவானந்தமே நம் சிந்தையுள் நிறையும்[36]

போன்ற வரிகள் உலக பந்தங்கள் பற்றிய சாரத்தினைத் தனது கீர்த்தனைகளூடாக எத்துணை தூரம் சமூகத்துடன் பகிர்ந்து, தெளிவுபடுத்தி அவர்களையும் தேவார நாயன்மார்கள் போல மாய வாழ்வி லிருந்து மீட்டெடுப்பதற்காக சிவன் உழைத்திருக்கின்றார் என்பதனைக் கண்டு கொள்ளமுடிகின்றது. கர்ம வினைகள் பற்றிய சித்தாந்த விளக்கத்திற்கு சிவன் அவர்கள் வழங்கியிருக்கின்ற இடத்தினை தெரிந்து கொள்ளுவதற்கு மேற்படி தரவுகள் சான்றுகளாக அமைகின்றன.

இந்தக் கர்ம வினை அகற்றி பரகதி பெறுவதற்கு பதியின் பார்வை ஒன்றே போதும் என்கிறது சித்தாந்தம். இதனையே

சிவன் அவர்களும் தனது கீர்த்தனைகளிலே வலியுத்திச் செல்வதனைக் கண்டுகொள்ள முடிகின்றது. பவ வினைபோக்கி பரகதி பெற இறையன்றி வேறு துணையில்லை என்பதனை மிகவும் உறுதியும் அறுதியுமாக தனது கீர்த்தனைகளிலே சிவன் அவர்கள் பதிவு செய்திருக்கின்றார்.

'பக்த சம்ரக்ஷணி பாப சம்ஹாரிணி
துக்க நிவாரிணி துர்கதி நாசினி[37] என்றும்,

'இம்மைக்கும் மறுமைக்கும் சுகந்தருவோனே' என்றும். [38]

'ஸாஸ்தாவின் பாதம் சரண்புகுந்தால்
காமம் முதலாம் அறுபகை தனை அறுபடல்
காருண்யம்' [39]

என்று பல இடங்களிலே விவரித்துச் சென்றிருப்பதை கண்டுகொள்ளமுடிகின்றது.

**நிறைவுரை.**

தொகுத்து நோக்கும்போது சைவ சித்தாந்தம் முன்வைக்கின்ற கருத்துக்களை பாபநாசம்சிவன் அவர்கள் தனது கீர்த்தனைகள் வாயிலாக உலகிற்கு எடுத்துரைத்திருக்கின்றார். முப்பொருளுண்மை பற்றி, பவ வினைகள் பற்றி, தளைகளிலிருந்து விடுபடும் வகைபற்றி எல்லாம் மிக எளிமையான வகையிலே கீர்த்தனைகளாக வடிவமைத்துத் தந்திருக்கின்றார்.

சைவ சித்தாந்தம் ஒரு தத்துவக்கடல். இசைமரபிலே வழக்கிலிருக்கக்கூடிய பா வடிவங்களிலே கீர்த்தனை வடிவமானது இலகுவானது, எல்லோரையும் இலகுவில் கவரவல்லது, எல்லோராலும் இலகுவில் பின்பற்றக்கூடியது என்கின்ற பல எளிமையான வரையறைகளைக் கொண்டிருக்கக்கூடிய பா வடிவமாக இசையுலகினரால் கருதப்படுகின்றது. எனவே சித்தாந்தமாகிய வாழ்வின் தத்துவ மெய்ப்பொருளை இலகுவான இசைப் பாவடிவமான கீர்த்தனை வடிவத்தினூடாக சமூகத்திற்கு வழங்குவதிலே பாபநாசம் சிவன் அவர்கள் தனது படைப்புக்களை யாத்து வெற்றியும் கண்டிருக்கின்றார் என்கின்ற முடிவிற்கு இந்த ஆய்வின் மூலம் வர முடிகின்றது.

**அடிக்குறிப்புகள்:**

1. Oliver sacks : Musicophilia : **Tales of Music and the Brain,** Revised and Expanded Edition Paperback, P.10 .
2. Daniel J. Levitin : **This Is Your Brain on Music** : The Science of a human Obession hardcover, p.15.
3. ருக்மிணி ரமணி : (1934) சிவசக்தி கீர்த்தனை மாலை. பாகம் 1, இராகம் - காம்போஜி, தாளம் ஆதி, ப. 83
4. மேலது, இராகம் - காபி, தாளம் ஆதி, ப.20
5. ருக்மிணி ரமணி, (1985), சிவசக்தி கீர்த்தனை மாலை, பாகம் 5, இராகம் - பெஹாக், தாளம் ஆதி, ப. 55
6. ருக்மிணி ரமணி, (1972), சிவசக்தி கீர்த்தனை மாலை. பாகம் 2, இராகம் - ஸ்ரீரஞ்சனி, தாளம் ஆதி, ப. 19
7. ருக்மிணி ரமணி, (2005), சிவசக்தி கீர்த்தனை மாலை, பாகம் 6, இராகம் - தர்மவதி, தாளம் ஆதி, ப. 103
8. மேலது, இராகம் - சாருகேசி, தாளம் ஆதி, ப. 37
9. மேலது, இராகம் - சாருகேசி, தாளம் ஆதி , ப. 37
10. ருக்மிணி ரமணி,(1972), மு.கு.நூ., இராகம் - பியாகடை, தாளம் ஆதி, ப. 177

11. ருக்மிணி ரமணி, (2003), சிவசக்தி கீர்த்தனை மாலை. பாகம் 3, இராகம் - அடானா, தாளம் ஆதி, ப. 71.
12. மேலது, இராகம் - சாரங்கா, தாளம் ஆதி, ப. 68.
13. மேலது, இராகம் - காம்போதி, தாளம் ஆதி, ப. 89.
14. ருக்மிணி ரமணி, (2005), சிவசக்தி கீர்த்தனை மாலை. பாகம் 6, இராகம் - லதாங்கி, தாளம் ஆதி, ப. 22.
15. மேலது, இராகம் - மாயாமாளவகௌளை, தாளம் மிஸ்ரசாப்பு, ப. 35.
16. மேலது, இராகம் - நவரச கன்னட, தாளம் ஆதி , ப. 45.
17. மேலது, இராகம் - சுத்தசாவேரி, தாளம் கண்டஜம்பை, ப. 40.
18. மேலது, இராகம் - காம்போதி, தாளம் ஆதி, ப. 26.
19. ருக்மிணி ரமணி,(1985), மு.கு.நூ., இராகம் - பீம்பிளாஸ், தாளம் ஆதி, ப. 44.
20. மேலது, இராகம் - முகாரி, தாளம் ஆதி, ப.42.
21. மேலது, இராகம் - மணிரங்கு, தாளம் ஆதி, ப.40.
22. மேலது, இராகம் - ஷண்முகப்ரியா, தாளம் ஆதி, ப.26.
23. மேலது, இராகம் - காபி, தாளம் ஆதி, ப.40 17.
24. மேலது, இராகம் - கேதாரம், தாளம் ஆதி, ப.22.
25. ருக்மிணி ரமணி, (2005), மு.கு.நூ., இராகம் - பைரவி, தாளம் கண்டஜம்பை, ப. 22.
26. ருக்மிணி ரமணி, (1985), மு.கு.நூ., இராகம் - சிந்துபைரவி, தாளம் ஆதி, ப. 52.
27. மேலது, இராகம் - மோஹனம், தாளம் ஆதி, ப. 51.
28. ருக்மிணி ரமணி, (2003), மு.கு.நூ., இராகம் - நடபைரவி, தாளம் ஆதி , ப. 22.
29. ருக்மிணி ரமணி, (1972), மு.கு.நூ., இராகம் - சாரங்கா, தாளம் - சாபு, ப. 88.
30. மேலது, இராகம் - சாரங்கா, தாளம் - சாபு , ப. 88.
31. மேலது, இராகம் - பியாகட, தாளம் - ரூபகம், ப. 122.
32. மேலது, இராகம் - பைரவி : தாளம் - சாபு , ப. 88.
33. ருக்மிணி ரமணி,(2003), மு.கு.நூ., இராகம் - ஸஹானா, தாளம் - ஆதி, ப. 28.
34. மேலது, இராகம் - சுபபந்துவராளி, தாளம் - ஆதி, ப. 45.
35. மேலது, இராகம் - பிலஹரி, தாளம் - ஆதி, ப. 47.
36. மேலது, இராகம் - தர்மவதி, தாளம் - ஆதி, ப. 56.
37. ருக்மிணி ரமணி, (2005), மு.கு.நூ., இராகம் - புன்னாகவராளி, தாளம் - ஆதி, ப.78.
38. ருக்மிணி ரமணி, மு.கு.நூ., இராகம் - கானடா, தாளம் - ஆதி, ப. 88.
39. ருக்மிணி ரமணி, (2005), மு.கு.நூ., இராகம் - தர்மவதி, தாளம் - ஆதி, ப. 57.